மாலை மணி
பொன். கு. கோதண்ட[illegible]
சந்தா விகிதம்
25/6 திருவள்ளுவர் குடியிருப்பு
கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை 600 078.
ஆண்டொன்றுக்கு ரூ.24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ.12-0-0
மூன்று மாதத்திற்கு ரூ. 6-0-0
3 மாதத்திற்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளமாட்டாது.

Regd No. M. 5458

[illegible] விலை அணா ஒன்

மாலைமணி

(திராவிடத் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்:— மு. கருணாநிதி
PHONE No. 4502

Editor:— M. KARUNANITHI
MALAI MANI TAMIL DAILY

நீடித்த விளம்பர[illegible] விண்ணப்பித்துக் கொள்ள[illegible]வும்.
மானேஜர்.

மலர் 3 சென்னை 12-2-52 செவ்வாய் ★ வெளியூர் 13-2-52 புதன் மணி 183

★ 'மந்திரிசபை அமைப்பு மாநாடு' ★

அண்ணா - ஜீவா சந்திப்பு

சுயேச்சையாளர்கள் கொள்கையே இல்லாதவர்களல்லர்

ஜனநாயக முன்னேற்ற சர்க்கார் பற்றிப் பொதுச் செயலாளர் அறிக்கை

8-2-52ல் காஞ்சீபுரத்தில் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும் கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவா அவர்களும் சந்தித்துப் பேசினார்கள். அதுபற்றிய விபரத்தை பொதுச் செயலாளர் அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்கள். அது வருமாறு:—

8-2-52 அன்று தோழர் ஜீவானந்தம் அவர்கள் என்னைக் காஞ்சீபுரத்தில் சந்தித்தது குறித்தும் தோழர் ஜீவானந்தம் அவர்களுக்கும் எனக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகள் குறித்துப் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் விபரம் கேட்டுக் கடிதங்கள் [illegible]

தோழர் ஜீவானந்தம் அவர்கள் 8-ந் தேதியன்று காஞ்சீபுரத்தில் என்னைச் சந்தித்து, தற்போதைய சென்னை ராஜ்ய அரசியல் நிலைமை குறித்தும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் காங்கிரசல்லாத முற்போக்குச் சக்தியினர் வெற்றி பெற்றிருப்பது குறித்தும், இனிச் செய்யவேண்டிய வேலைகள் குறித்தும் விவாதித்தார். அவருடன் ஈரோடு தோழர் கே. டி. ராஜு அவர்களும் உடன் வந்திருந்தார்.

சென்னை ராஜ்யத்தில் காங்கிரசல்லாத மந்திரி சபை அமைப்பதற்குரிய சாத்தியங்களை எடுத்துக் கூறி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற மற்றக்கட்சிக்காரர்களெல்லாம் வெறும் குழப்பம் விளைவிப்பவர்கள், கலகம் செய்பவர்கள், நாட்டின் பொறுப்பை ஏற்று நடத்த முடியாதவர்கள் என்று காங்கிரசார் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் தவறு என்பதை நிரூபிக்கவேண்டுமென்றும் மற்றவர்களுக்கும் பொதுமான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் மக்கள் நலனை மனதில்கொண்டு பணியாற்ற முடியுமென்றும், [illegible] [illegible]ர்களுடனும் சுயேச்சையாளர்களுடனும் ஒரு குறைந்த பட்சத் திட்டத்தின் கீழ் ஒத்துழைக்கத் தயாராகஇருக்கிறதென்றும் 12, 13 தேதிகளில் சென்னையில் நடைபெறும் காங்கிரசல்லாத எம். எல். ஏ. க்கள் கூட்டம் இந்த நோக்கத்துடனேயே நடைபெறுகிறதென்றும், இந்த முயற்சியில் கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், மற்றும் முற்போக்குக்குக் கருத்துப் படைத்த எல்லா ஸ்தாபனங்களும் ஒரே அணியில் திரளவேண்டுமென்றும் தோழர் ஜீவானந்தம் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரே அணியில் வேலை செய்ய முடியவில்லை என்பதற்கு வருத்தம் தெரிவித்துவிட்டு, தேர்தலுக்குப்பிறகு கம்யூனிஸ்ட் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒத்த பிரச்னையில் கூட்டாகப்பணியாற்றலாம் என்று நான் முன்பு கூறியிருப்பதை [illegible] தாபத்தில் எல்லா சக்திகளும் கூட்டாகப் பணியாற்ற வேண்டுமென்றும், இந்தச் சூழ்நிலை இந்நாட்டில் பிற்போக்குச் சக்திகளின் அழிவைத் துரிதப்படுத்துமென்றும், கடந்த 3-ந் தேதியன்று 'அரசியல் கைதிகள் விடுதலை தினம்' கொண்டாடப்பட்ட நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கு கொண்டது எதிரிகளுக்குப் பெரும் அதிர்ச்சியென்றும், முற்போக்கு எண்ணம் படைத்தோர்க்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியென்றும் தான் கலந்துகொண்ட சென்னைக் கடற்கரைக் கூட்டத்தின் மேடையில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும், திராவிடர் கழகக் கொடியும், கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியும் பறந்து கொண்டிருந்தன என்றும், இந்தக் காட்சியைப்பற்றித் தான் பேசுகையில் 'இன்றைய தினம் ஓர் பொன்னாள். இந்த மேடையில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும் திராவிடர் கழகக் கொடியும் கம்யூனிஸ்ட் கொடியும் கம்பீரமாகப் பறக்கின்றன. இந்த முக்யத்துவத்தை நாம் மறக்க முடியாது' என்று சொன்னவுடன் மக்கள் செய்த கரகோஷம் அடங்குவதற்கு 5 நிமிடங்கள் பிடித்தன என்றும் எடுத்துச் சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சி ஒரு குறைந்த பட்சத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறது என்றும் அதனை 12, 13-ந் தேதி கூட்டத்தின் முன் விவாதத்திற்கு வைக்கஇருக்கிறது என்றும் சுயேச்சையாளர்களும், மற்றக் கட்சிகளும் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லலாமென்றும், எல்லோரும் பொதுவான ஒரு முடிவு செய்யவேண்டுமென்றும், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் காரியத்திற்கு தன்னுடைய முழு ஒத்துழைப்பைஅளிக்கவேண்டுமென்றும் வேண்டினார். கம்யூனிஸ்ட்கட்சியின்குறைந்த பட்சத் திட்டத்தின் பிரதியொன்றும் என்னிடம் கொடுத்தார்.

காங்கிரசல்லாத முற்போக்கு மந்திரி சபைஅமைவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாவிதமான ஒத்துழைப்பையும் கொடுக்குமெனக்கூறினேன். சுயேச்சையாளர்களை, உதிரிகள், தனித்தனியாக இருப்பவர்கள், கொள்கையில்லாதவர்கள் என்று கூறுவது தவறு. சுயேச்சையாளர்கள் பலரும எந்தக் கட்சியிலும் சேராதவர்களாய் இருக்க

(4-ம் பக்கம் பார்க்க)

'தென் இந்திய அழகி' போட்டி

25 ந் தேதிக்குள் மனுப்போட வேண்டும்

சென்னை, பிப் 11—

தென் இந்தியாவின் சிறந்த அழகியைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவிருக்கும் போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் முழு தோற்றப் போட்டோ படம் ஒன்றும்அரை உருவப் பஸ்ட் படம் ஒன்றும் அனுப்பிவைக்க வேண்டுமென்று ஜெளப்வரலா அறிவிக்கிறார்.

போட்டியில் சேர விரும்புபவர்கள் பிப்ரவரி 25 ந் தேதிக்குள் தங்கள் படங்களையும்மனுவையும் அனுப்பவேண்டும், பொறுக்கி எடுக்கப்படுபவர்கள் மார்ச் 5-ந் தேதிக்குள் சென்னைக்கு வரவேண்டும். மார்ச் 6. 7-ம் தேதிகளில் பூர்வாங்க தேர்தலும் 8-ம் தேதியன்று இறுதித்தேர்தலும் நடைபெறும். பொறுக்கி எடுக்கப்படுபவர்கள் சென்னைக்கு வரும் பிரயாணச் செலவையும் இங்கு தங்கியிருப்பதற்கான செலவையும் தாங்களே ஏற்க வேண்டும், மனுபோடுவதற்கான நமூனாக்களும் விதிகளும் மவுண்ட்ரோடில் உள்ள நியூ [illegible] தியேட்டர் சர்க்கார் [illegible] கயில் உள்ள சேவா [illegible] செய்தி இலாகா காரியா[illegible] [illegible] காரியதரிசி [illegible] தலைமை ஆசிரியர்கள் ஆகியோரிடம் கிடைக்கும்.

உலகத்தில் சிறந்த அழகியை தேர்ந்தெடுப்பதற்காக இப்போட்டி நடத்தப்படுகிறது.

மத்திய பாரத்திலும் காங்கிரஸ் ஆட்சி நீக்கம்

காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்தனர்

குவாலியர், பிப். 11..

மத்யபாரத் சமஸ்தான யூனியன் பிரதமர் தக்மால் ஜெய்ன் இன்று தமது மந்திரிசபை ராஜிநாமாவை சமஸ்தான யூனியன் ராஜப்புரமுகரிடம் சமர்ப்பித்தார்.

புது மந்திரி சபை அமைக்கப்படும் வரை பதவியிலிருக்கும் படி பிரதமரை ராஜப்பிரமுகர் கேட்டுக் கொண்டார் பிரதமர் தக்மால் ஜெய்ன் இன்று பாம்பாயிலிருந்து குவாலியருக்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ராஜப் பிரமுகர் மாளிகைக்குச் சென்று தமது மந்திரிசபை ராஜிநாமாவைக் சமர்ப்பித்தார்.

பிரதமர் தக்மால் ஜெய்னும், மற்றும் சில மந்திரிகளும் தேர்தலில் தொல்வியடைந்தனர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம். எல். ஏ-க்களின் கூட்டமொன்றை இம்மாதம் 22-ந் தேதிக்கு பிரதமர் அழைத்துள்ளார் அது சமயம் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் [illegible]

சமாதான மாநாட்டில் தென் கொரியா

சேரக் கம்யூனிஸ்ட்கள் சம்மதம்

பான்முனஜோன் பிப் 10—

கொரியா யுத்தம் நிறுத்தப்பட்ட 3 மாதங்களுக்குள் கூட வேண்டிய சமாதான மாநாட்டில் தென் கொரியா கலந்துகொள்ள வேண்டுமென்பதற்கு கம்யூனிஸ்டுகள் இன்று சம்மதம் தெரிவித்தனர் ஆனால் மாநாட்டில் கொரிய விவரமே விவாதிக்கப்பட வேண்டுமென ஐ. நா. கூறியதை நிராகரித்து விட்டனர் கம்யூனிஸ்டுகளின்பிரேரணை முதலில் வட கொரியா செஞ்சீனா ஒரு புறமும் மறுபுறம் ஐ. நா. தரப்பில் சம்பந்தப்பட்ட நாடுகளுமே மாநாட்டில் கலந்து கொள்ளலாமென்று தெரிவித்தது.

யுத்த நிறுத்தம் சம்பந்தமாக சர்க்கார்களுக்கு சிபாரிசுகள் அனுவசியமென்று கருதுவதாகவும் தங்கள் சர்க்கார்களுக்கு அனுசித சிபாரிசுகள செய்ய வேண்டும் என கம்யூனிஸ்டுகள் வலியுறுத்தினால் பேச்சுகளை நிறுத்த வேண்டியதுதான் என்றும் இன்று (பிப். 11-ந் தேதி) ஐ. நா. பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொரியா அரசியல் பிரச்னை தீரவும் கீழ்க்கோடி விவகாரங்கள் விவாதமும் வெவ்வேறான விஷயமென்று யு. எஸ். ஸில் கருதப்படுகிறது. (வாசிங்டன் செய்தி).

பொதுவாகக் கீழ்க்கோடி பிரச்னைகளை தகுந்த இடத்தில் தக்க சமயத்தில் பேசத் தயாரென்றும் இதில் வல்லரசுகள் மட்டுமின்றி ஜப்பான் உட்படத் தூரக் கிழக்கிலிருக்கும் சிறு தேசங்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் அபிப்பிராயம் இருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் கூறின.

மலேயோ, இந்தோ சீனா, பிலிப்பின்சில் சண்டையை முடித்துக்கொள்ள அதிகார வட்டாரத்தில் நாட்டம் இருக்கிறது.

கொரியாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டால் கடைபிடிக்க வேண்டிய நீண்டகால கொள்கை குறித்து உயர்தர யு. எஸ். அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

5 மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி இல்லை

ராஜஸ்தானில் மதில்மேல் பூனை நிலை

புதுடெல்லி பிப் 11..

சென்னை, ஒரிஸா ஆகிய இரு மாகாணங்களிலும், திருவாங்கூர்-கொச்சி பாடியாலா ஆகிய இரு சமஸ்தான யூனியன்களிலும், காங்கிரஸ் அரசாங்கம் அமைக்க முடியாது இந்த மாகாண சமஸ்தானங்களில் காங்கிரஸுக்கு மெஜாரிடி கிடைக்கவில்லை.

ராஜஸ்தான் சமஸ்தானத்தின் நிலைமதில் மேல்பூனையாகஇருக்கிறது. காங்கிரசுக்கு மெஜாரிடி கிடைத்தாலும் கிடைக்கலாம். எதிர்கட்சிகளுக்கு மெஜாரிடி கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற நிலையே அங்கு உள்ளது அங்கு இன்னும் சில தொகுதிகளின் முடிவு தெரியவேணடியிருக்கிறது அப்படியே காங்கிரசுக்கு மெஜாரிடி கிடைத்தாலும் அது குறுகிய மெஜாரிடியாகவே இருக்கும்.

இந்தியாவிலுள்ள 22 மாகாண சமஸ்தானங்களில் மீதியுள்ளவற்றில்அடுத்த5 ஆண்டுகளுக்குக் காங்கிரஸ் அரசாங்கமே இருக்கும்.

பீகார் மந்திரிகளின் தில்லுமல்லுகள்

நான் கூறுவது தவறாயின் சுட்டுத் தள்ளுங்கள்

ஒரு மெம்பரின் சவால்

புதுடெல்லி பிப், 11—

டெல்லி சட்டசபையில் ஜனாதிபதி நிகழ்த்திய பிரசங்கம் குறித்து இன்று சபையில் விவாதம் ஆரம்பமாயிற்று.

பி. சிவராவ் விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பொருளாதாரத் துறையில் சர்க்கார் இன்னமும் பெருமளவுக்கு முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார்.

சர்க்காரின் கொள்கையை ஆர். வேலாயுதன் கண்டித்தார். தற்போதைய சர்க்கார்களுக்குப் பதிலாக மாகாணங்களிலும் முற்போக்கு அரசாங்கங்கள் அமைக்கப் படவேண்டும் என்று கோரினார். காங்கிரசை மக்கள் எவ்வளவு தூரம் வெறுக்கிறார்கள் என்பது திருவாங்கூர்-கொச்சியில் நடந்த தேர்தலிலிருந்து தெரிகிறது என்று அவர் சொன்னார்.

தேர்தலில் ஜெயிக்க பீகார் மந்திரிகள் பல தில்லுமுல்லுகளில் ஈடுபட்டதாக பாபுராம் நாராயணசிங் குற்றம் சாட்டி [illegible] விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அவர் கோரினார். பீகார் மந்திரிகள் மீது நான் கூறும் குற்றச்சாட்டுகள் பொய் என்று நிரூபிக்கப்பட்டால் என்னைச்சுட்டுத் தள்ளினாலும் சரி என்று என்று அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஒழுங்கற்ற முறையில் நடந்ததாக ஆர். வேலாயுதன், எச். வி. காமத் ஆகியோரும் புகார் கூறினர்.

ஜெர்மனியின் 'வி' வெடிகுண்டுகள்

ரஷ்யா உபயோகித்துப் பார்த்தது

ஜெர்மனியின் 'வி வெடிகுண்டுகள் போல இனனும் அபிவிருத்தி செய்யப்பட்டவைகளை ரஷ்யா பாலடிக்கிலும் ரஷ்யாவிலும் போட்டே உபயோகித்துப் பார்த்திருப்பதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

திருடர்கள் இல்லை

7 முறை உருண்டு புரண்ட பஸ்

மாட்ரிட், பிப் .10—

ஸ்பெயின் தேச ஸரமான இங்கிஜோன் மாகாணத்தில் மலைப் பாங்கான பிரதேசத்தில் சென்றுகொண்டிருந்தது பிரயாணி பஸ் ஒன்று கவிழ்ந்து அடிபாதாளத்தில் அகழியில் விழுந்ததால் 4-பேர் மாண்டனர் 26 பேருக்குப் பலத்த காயமேற்பட்டது. பிரயாணிகளுடன் பஸ் 7 தடவை உருண்டு புரண்ட பின்னரே நின்றது. பிரயாணிகள் 70 பேரில் ஒரு சிறுவனே காயம் படாமல் தப்பித்தான்.

8 அவுன்சு அரிசி கொடுக்க முயற்சி

டில்லி தெய்வம் வரங் கொடுக்க வேண்டுமாம்

இருப்பு நிலை திருப்தியாயுள்ளது

சென்னை, பிப் 11—

தற்போது சென்னை ராஜ்யத்தில் அரிசி இருப்பு நிலைமை திருப்திகரமாக இருப்பதாயும், ஆகையால் அரிசிரேஷன் அளவை ஆறு அவுன்ஸிலிருந்து எட்டு அவுன்ஸிற்கு அதிகரிக்க உத்தேசித்திருப்பதாகவும் உணவிலாகா மந்திரி ஜே எல் பி ரோச்விக்டோரியா பத்திரிகை பிரதிநிதிகளிடம் கூறினார்.

இம்மாதம் 19-ந்தேதி டில்லியில் நடைபெற விருக்கும் உணவு இலாகா மந்திரிகள் மகாநாட்டிற்குத்தாம் செல்லும் போது இந்த விவரத்தை இந்தியா சர்க்காரிடம் தெரிவிக்கப்போவதாயும், டில்லியிலிருந்து திரும்பிய உடன் எந்தத் தேதியிலிருந்து அதிகரித்த ரேஷனைக் கொடுப்பதென்பது நிணயிக்கப்படும்என்றும் உணவு மந்திரி மேலும கூறினார்.

இவ்விதம் ரேஷன் அளவை அதிகரிப்பதற்கு இந்தியா சர்க்காரின அனுமதி அவசியமில்லை என்றும் இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்றும் தற்போதைய நிலைமையில் ரேஷன் அதிகரிப்பிற்கு இந்தியா சர்க்கார் ஆட்சேபம் இருக்குமென்று தாம் நினைக்கவில்லை என்றும் மந்திரி கூறினார்

சில வாரங்களுக்குமுன் ராஜ்ய உணவு இலாகா அதிகாரிகள் மகாநாடு டில்லியில் நடந்தபோது ஆறு லட்சம் டன் அரிசியும் மூன்று லட்சம் டன் இதர தானியங்களும் வேண்டுமென்று சென்னை சார்பாகக் கோரப்பட்டதாயும் ஆனால் பின்னர் பருவ மழை தவறி சாகுபடி பாதிக்கப்பட்டிருப்பதாலும் நெல் ஏக்ரேஜ் பொதுவாகவே குறைந்திருப்பதாலும் உணவு மந்திரிகள் மாநாட்டில் சென்னை ராஜ்யத்தின் கோரிக்கையை மாற்றிக் கொள்ள நேரிடுமென்றும், ஆனால் இது இன்னும் பூர்த்தியாகவில்லை என்றும். இன்னும் சில தினங்களில் முடிவாகலாம் என்றும் மந்திரி கூறினார்.

ரேஷன் நீக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் சாகுபடி இன்மையால் நிலைமை மோசமாக இருப்பதாயும்; அங்கெல்லாம் கொள்முதல் இல்லாமல் போனாலும் போதிய உணவு இல்லாமல் கஷ்டப்படுவதாயும் ஆகையால் இரண்டு அவுன்ஸ் [illegible] சர்க்கார கொடு[illegible] வேறு உணவு வாங்கிக்கொள்ள வழியில்லாமல் ஜனங்கள்கஷ்டப்படுவதாயும் இவர்கள் விஷயத்தில் ஏதாவது செய்ய வேண்டுமென்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதில் உண்மை இருப்பதாயும் சில சமயங்களில் இந்த இரண்டு அவுன்ஸ் அரிசிகூடக் கொடுக்க முடியாமல் இருந்திருப்பதாயும் இந்தப் பிரச்னையைக் கவனிப்பதாயும் மந்திரி கூறினார்.

சென்னை சர்க்கார் முதலில் கோரியபடி உற்பத்தியாளருக்கு நெல் விலையை அதிகரிக்க இந்தியா சர்க்கார் ஒப்புக் கொள்ளவில்லை என்றும் மணங்கு எட்டணா உயர்விற்குத்தான் ஒப்புக்கொண்டிருப்பதாயும் ஏற்கனவே கோரியபடி இன்னும் எட்டணாக் கொடுத்து ஒரு ரூபாய் வரை கொடுக்க அனுமதிக்க வே[illegible]மென்றும் இந்தி[illegible] அடுத்தவார [illegible] கோர[illegible]

ஆசை அறவில்லை

"காங்கிரஸ்காரர்கள் தியாகிகள்; பதவி ஆசையோ பண ஆசையோ இல்லாப் புனிதர்கள்; நாட்டை நல்ல நிலைமையில் கொண்டு வருவதற்கே உழைக்கின்றனர். இப்போதும் நிலையான ஒரு மந்திரி சபை ஏற்படுத்தவே தேர்தலில் கலந்து கொண்டு, மக்களிடம் ஓட் கேட்டது. காங்கிரஸ் ஒன்றே நாட்டை நல்லபடி ஆளுமாகையால், தேர்தலில் நின்றது என்றெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கூறினர்.

காங்கிரஸ்காரர்கள் எதைக் கூறியபோதிலும், மந்திரிகளாகப் பதவி ஏற்றவர்கள் முதல் சாதாரண நாடோடிக் காங்கிரஸ்காரர்கள் வரை தியாகத்திற்கு-நாசவேலைக்குக்-கூலியாக நிலங்களைப்பெற்றுக் கொண்டிருப்பதையும் மந்திரிகள் மீது மற்றொரு மந்திரி குற்றங்கள் சுமத்தியபோதும், மானத்துடன் பதவிகளை உதறி வெளியில் வந்து அக்குற்றச் சாட்டுகளைப் பொதுமக்கள் மன்றத்தின் முன் வைத்து விசாரணைக்குட்படுத்தாமல், பதவிகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்ததையும், சாதாரண ஏழைகளாயிருந்தவர்கள்கூட, சட்டசபை [illegible] களாகவும் பிறப்பதவியாளராகவும் ஆனபிறகு பணக்காரர்களாகிவிட்டிருப்பதையும், கடந்த 5 ஆண்டுகளில் இவர்கள் நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்த முறைகளையும், இவர்களுடைய திட்டங்களையும் நன்கு அறிந்துகொண்ட பொதுமக்கள், பொதுத் தேர்தலில் காங்கிரஸ்காரர்களின் மூக்கறுத்து மண்ணைக் கவ்வச்செய்து படுகுழியில் தள்ளி சமாதி செய்துவிட்டனர். நாட்டை நல்லபடி ஆட்சி செய்யக் காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாதாகையால், தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்வதென்றுதான் காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியுமாகையால் இனிமேல் நாட்டையாளக் காங்கிரஸ் தேவையேயில்லை யென்றும் நிலையான மந்திரிசபை ஏற்படுத்த வேண்டிய கவலை இந்தச் சுயநலமிகளுக்குத் தேவையில்லை யென்றும் கூறிப் பொதுமக்கள் காங்கிரஸ்காரர்களைப் பொதுத் தேர்தலில் படுகுழியில் தள்ளிச் சமாதிச் செய்தனர்.

எனவே, குமாரசாமி ராஜா டில்லிக்கோடி தங்கள் திறமைகளைக் காட்டி, மீண்டும் இடைக்கால மந்திரிசபை எனும் பேரால் தாம் மட்டும் ஆட்சிப் பீடத்தை அபகரிக்க வழி செய்து கொண்டு வந்துவிட்டனர். இவருடைய இந்த ஆட்சியை வைத்துக் [illegible]ாண்டு முயன்று பார்க்க [illegible] கங்கணம் கட் [illegible] காவில் சுயேச்சை வாதிகளைத் தங்கள் காங்கிரசுக்குப் பலம் தரும்படியாகக் கெஞ்சப்போவதில்லை என்று இவர்கள் கூறிய சொற்களின் ஒலி மாறு முன்னரே, ஆந்திர கா. க. தலைவரும், காமராசரும் சுயேச்சை வாதிகளைக் காங்கிரசுக்கு ஆதரவாகத் திரட்டும் திருப்பள்ளியில் முழு மூச்சுடன் இறங்கியிருக்கின்றார்கள் என்று தெரிகிறது. காமராசா ஒருபுறம், ஆந்திரத் தலைவர் ஒருபுறம், ராஜா சர் எம். ஏ. முத்தைய செட்டியார் ஒருபுறம் எனப் பல வகைகளிலும் சுயேச்சை வாதிகளைத் தங்களுடன் சேருமாறு தூண்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இம்முறை சுயேச்சை வாதிகள் அரசியல் அறிவு நிறம்பியவர்களாகவும் காங்கிரஸ்காரர்களின் ஊழல்களை அறிந்தாவகளாகவும் காங்கிரசை எதிர்த்து நின்று வெற்றி பெற்றவர்களாகவும் இருப்பதால், அவர்களை எளிதில் காங்கிரஸ் தன் வலையில் சிக்கவைக்க முடியவில்லை. கள்ளச் சந்தையல் விருப்பமும், பதுக்கல் வேலையில் ஆசையும், ஊழல்கள் நடத்தி, இலஞ்சம் வாங்கிப் பணம் பெருக்க வேண்டும் என்ற ஆசையும், சுயநலமும் பெருகியவர்கள [illegible] சட்டசபைப் பதவியை ஆசைப்பட்டு வந்தவர்களெல்லாம் காங்கிரஸ்காரர்களுடன் கூடிக்கொள்ள விரும்புவர்!

எனவே, சுயேச்சை வாதிகள் எவரும் சேராமற் போகவோ, முதலில் சுவர்களைச் சேர்க்கப் போவதில்லை என்று கூறிவிட்டாலும் இப்போது காங்கிரஸ் தலைவர்கள் தலைகீழாக நின்று முயன்று வருகின்றனர், ராஜகோபாலாச்சாரி போன்றவர்கள்கூட, சுயேச்சைவாதிகள் காஙகிரசில் சேரவும் கூடாது, காஙகிரஸ் சேர்க்கவும் கூடாது என்று கூறியிருந்தும் காமராசர், சஞ்சீவி ரெட்டி, செட்டி நாட்டு ராஜா முக்கூட்டு, பெருமுயற்சி எடுத்து அரசாஙகம் அமைக்க் முயன்று வருகிறது. ஆசை யாரை விட்டது! பாபம்!

அகதிகளாக நடிக்கும் ஒற்றர்கள்

ஸ்டாக்ஹோம் பிப் 11...

அரசியல் அகதிகள் வருவதற்கு இடம் கொடுப்பதை சாதகமாகக்கொண்டு ஒற்றர்கள் வருகிறார்கள் என்பதை ஸ்வீடன் அறிய ஆரம்பித்திருக்கிறது, ஸ்வீடனிலேயே கம்யூனிசத்தை பரப்ப இந்த ஒற்றர்கள் முயல்வதாகத் தெரிகிறது,

தோழர்கள் தங்கப்பழம் சிவசாமி சுற்றுப்பயணம்

16-2-52 வீரவநல்லூர்
17-2-52 மாலை 4-மணி செங்கோட்டை, இரவு 7-மணி புல்லுக்காட்டுவலசை
18-2-52 அம்பாசமுத்திரம் இரவு 7-மணி பொட்டல் புதூர்
19-2-52 விக்ரமசிங்கபுரம்
24-2-52 ஸ்ரீவைகுண்டம்

...மாப் படத தயாரிப்பு

ரஷ்யா உதவி அளிக்க தயார்

சென்னை, பிப் 10—

சர்வதேச சினிமாப் பட திருவிழாவை யொட்டி பல்வேறு நாடுகளிலிருந்து சென்னை வந்துள்ள பிரதிநிதிகளும் நேற்று மாலை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தென்னிந்திய சினிமா ஸ்டூடியோக்கள் சங்கத்தின் சார்பில் ஆர்.எம்.சேஷாத்ரி அயல் நாட்டுப்பிரதிநிதிகளை வரவேற்றார் பல்வேறு நாட்டு மக்களிடையே செளஜன்யமான உறவையும்சகோதரத்துவததையும் உண்டாக்குவதற்கு சினிமாபடங்கள் சிறந்த சாதனமாய் விளங்கவேண்டும் என அவர் கூறினார்.

சீனப் பிரதிநிதிகள்கோஷ்டியின் சார்பில் இன்ஸீன் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார் இந்தியா-சைனு மக்களுக்கிடையே நல்லுறவு வளரும் என்றுதான் நம்புவதாக அவர் கூறினார்.

அமெரிக்காவின் சார்பில் பிராங் சாய்ரா பேசுகையில் சினிமாப் படப் பிடிப்பு தொழிலிலுள்ள பல்வேறு தொழில் நுட்பக் கலைஞர்களின் ஒத்துழைப்பு கூட்டு முயற்சியினால்தான் சினிமாத் தொழில் வளர முடியும் என கூறினார்.

சோவியத் கோஷ்டி சார்பில் என் சேமினேவ் பேசுகையில் ருஷ்யாவில் மக்களின் நல வாழ்வுக்காகச் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதாகவும் சினிமாத் தொழில் நுட்ப கலைஞர்களையும் இந்தியாவுக்கு அனுப்பிவைக்க ஸோவியத் நாடு தயாரென்றும் கூறினார். இந்தியா சம்பந்தமாக டாகுமெண்டரி படம் ஒன்றைத் தயாரிக்க ருஷ்யா விரும்புவதாகஅவர் கூறினார்.

[illegible] கையில் ருஷ்யாவில் சினிமா படங்கள் பொதுஜன நலனுக்காக தயாரிக்கப்படுகின்றனவே யொழிய கொள்ளை லாபம் அடிப்பதற்காக அல்ல என்று கூறினார்.

....

பர்ஸிய தேர்தலில் முஸாதிக் கட்சிக்கு வெற்றி

தெஹ்ரான், பிப். 11—

நேற்று ஓட்டு எண்ணுதல் நடந்த தெஹரான் தொகுதியில் 12 ஸ்தானங்களில் 11-ஐ டாக்டர் பிரதமர் முஸாதிக்கின் தேசியக் கட்சியினர் பிடித்து விட்டனர்.

....

'புட்பால்' லாட்டரிகளை யூகோ தடை செய்யும்?

பெல்கிரேட், பிப் 11—

கால்பந்து ஆட்ட லாட்டரிகள் (புட்பால்பூல்) ஒழிக்கப்படவேண்டும் என்ற பலமான கோரிக்கை இருந்து வருகிறது இதனால் இளைஞர்கள் சூதாட்டத்திலேயே அதிகமாக ஈடுபடுகிறார்கள் என்பதும் எடுத்துக் காட்டப் படுகிறது.

யூகோ சாக்கார் இக்கோரிக்கைக்கு இணங்கி தடை செய்தால் வாரத்தில் 1000000 தினார் வருமானத்தை இழக்க நேரிடும்.

சோஷலிஸ்ட் கட்சி நிர்வாகக் கமிட்டி

......

23-ந்தேதி சென்னையில் கூடும்

காசி பிப் 10—

சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாக கமிட்டிக் கூட்டமொன்று பிப்ரவரி 23-ந்தேதி முதல்சென்னையில் 3 நாட்களுக்கு நடைபெறும்.

தேர்தல் முடிவுகளை யொட்டி கட்சி நிலைமை பற்றி இங்கு சோஷலிஸ்ட் தலைவர்களுக்கிடையே நடைபெற்று வரும் விவாதம் நாளை மாலை முடியும் ஜெயப்பிரகாஷ் நாராயண் அசோக் மேத்தா மற்றும் 6 தலைவர்களும் இவ்வாதத்தில் கலந்து கொள்ளுகின்றனர்.

6-ம் ஜார்ஜ் மன்னரின் சவ அடக்கச் சடங்கில்

ஐந்து அரசர்கள் கலந்து கொள்வார்கள்

லண்டன், பிப் 11—

இந்த வெள்ளியன்று ஆறும் ஜார்ஜ் மன்னரின் சவ அடக்கச் சடங்கில் ஐந்து அரசர்கள் பெல்ஜியம், டென்மார்க், ஸ்வீடன், கிரீஸ் ஈராக்) கலந்து கொள்வார்கள் என அதிகாரப் பூர்வமான வட்டாரங்கள் அறிவிக்கின்றன. ஜார்டன் இளவரசரான ஹூஸேன், இபின் ஸாட் மன்னரின் புதல்வரான அளவரசர் பெயிஸல் முதலியோரும் இதில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

ஆறும் ஜார்ஜ் மன்னரின் உயில் பிரிக்கப்பட மாட்டாது என்றும், அரசர். குடும்பத்தவர்களுக்குத்தான் இதன் பூரண விவரங்கள் தெரியுமென்றும் கூறப்படுகிறது.

அதிக சோள உற்பத்தி

மத்ய கிழக்கில் ஆராய்ச்சி

கெய்ரோ பிப் 11—

அதிகமாக உற்பத்தியாகும் சோள உற்பத்திக்கு ஏற்ற சில ரகங்களை என்றும், மத்திய கிழக்கு நாடுகளதும் பயிர் செய்து ஆராய்ச்சி நடத்தி வருகின்றன.

இந்த ஆராய்ச்சிகள் நல்ல பலனையளித்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அதிகாரிகள் கூறுகின்றனர்.

......

கம்யூனிஸத்தைப் போராடுவதற்குக் காங்கிரஸுக்குப் புத்துயிர்

....

ஸண்டே டைம்ஸ் நிருபர் கூற்று

லண்டன், பிப் 11—

அனேக ராஜ்யங்களில் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதால் கம்யூனிஸத்தைப் போராடுவதற்குப் புத்துயிர் பெற்றுள்ளது என்று புது [illegible] லண்டன் [illegible] கூறுகிறார்.

இந்திய மக்களின் வாழ்க்கை தரத்தை அதிகப் படுத்தினால் தான் இது சாத்யமென்றும், இந்தியாவும் ஜனநாயகமுறையில் உலகத்திலும் அமைதியாக புரட்சி ஏற்படவேண்டுமென்று விரும்புகிறதென்றும் இவர் மேலும் கூறியுள்ளார்.

அந்நிய நாட்டு பார்வையாளர்களும் கடினமான ஜனநாயக முறையில் அரசாட்சி செய்யு இந்திய இப்பெரும் பரிசோதனையில் தேறி விட்டதென்றும் அபிப்பிராயப் படுகின்றனர்கள் என்றும்.

கோடிக்கான இந்திய வாக்காளர்களின் திறமையையும் இவர்கள் பாராட்டியுள்ளதாக இந்நிருபர் மேலும் கூறியுள்ளார்.

....

பிரிட்டினில் அபாயச் சங்கு

நகரங்களிலும்: கிராமங்களிலும் அபையும்

லண்டன், பிப் 11—

இன்னும் சில மாதங்களில் பிரிட்டனிலுள்ள ஒவ்வொருகிராமத்திலும், நகரத்திலும் அபாய சங்கு ஏற்படுத்தப்படும் என்று இங்கு அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் பாதுகாப்பு இலாகா காரியதரிசி ஸ்ர் டேவிட் மாக்ஸ்வெல்-பைப் கூறுவதாவது

நாட்டின் பாதுகாப்பு சிறந்த முறையில் ஏற்படுத்த புது அபாய சங்குகள வைக்கப்படும் பெறுவதற்கு வேண்டிய புது சங்குகள் ஆர்டர் செய்து விடப்பட்டது. சில இப்பொழுது வந்துள்ளன.

இரண்டு ஆண்டுகட்கு முன்பே ராணுவத்திற்கு வேண்டிய ஆட்கள் சேகரிக்கவும், நாட்டின பாதுகாப்பிற்கு வேண்டியவர்களுக்கு பயிற்சி படை திறட்டப்பட்டது எனினும் பாதுகாப்பு படைக்கு மட்டும் ஆட்கள் போதிய அறிவு இல்லை என்று ஸர் டேவிட் கூறினார்

இப்பொழுது 467,072 பேர்கள் தேவை என்றும் ஆனால்இது வரை 172,238 பேர்கள தான் சேர்ந்துள்ளனர் என்றும் 1653 ஜூன் முடிவிற்குள் இன்னும் 100,000 பேர்கள் சேர்க்க வேண்டுமென்றும் ஸர் டேவிட் கூறினார்,

ஜனத்தொகை குவிவது பெரும் ஆபத்து

யுனைடெட் ஸ்டேட்ஸில் அடுத்த 5 வருஷங்களில் 10 லக்ஷம் பேர் குடியேறுவதை அனுமதிக்கும் புது சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று அகதிகள் கமிஷனர்ஹாரி ரோஸன் பீல்ட் யூனெஸ்கோ யு எஸ் தேசியக்கமிஷன் மகாநாட்டில் வற்புறுத்தியுள்ளார்

அவர் கூறுவதாவது ஒரே இடத்தில் அதிக ஜனங்கள் குவியும்படி ஏற்பட்டால் பலாத்காரமே தலைதூக்கும் ஆகவே ஜனத்தொகை நெருக்கத்தை குறைக்க முயற்சிப்பது மிக அவசியமாகும்.

இன்று உலகில் சுமார் 60000000 பேர் அகதிகளாக இருக்கின்றனர். இந்த நிலைமை நீடிக்க விட்டால் அமைதிக்கே ஆபத்து ஏற்படும்-

லைபீரிய ஜனதிபதி

பீரட், பிப் 11—

லைபீரிய குடியரசு பிரஸிடெண்ட் இவ் வருஷம் ஆகஸ்ட் மாதம் லெபனானுக்கு விஜயம் செய்யப் விருக்கிறார் இவர் லெபனீஸ் பிரஸிடெண்ட் ஷேக் விஷாகா எல் கேளரியின் விருந்தினராகத் தங்கியிருப்பார்.

....

இதாலி கப்பல்களைகட்ட யு. எஸ். உத்தேசம்

ரோம் பிப், 11

இதாலிய கடற்தளங்களில் சிலகப்பல்களை கட்ட முடியுமா என்பதை அறிந்துவர அமெரிக்க நிபுணர்கள் கோஷ்டி இங்கு வந்து சேர்ந்துள்ளது.

உதவி ஆசிரியர் தேவை

தினசரிப் பத்திரிகையில் நல்ல அனுபவமும், தமிழ், ஆங்கிலத்தில் பயிற்சியும் உடைய உதவி ஆசிரியர் தேவை. நேரில் விண்ணப்பித்துக்கொள்ளவும்

கொரியா சமாதானப் பேச்சு

—....

திடீர் முன்னேற்றம்

பான்முன்ஜான பிப் 10—

கொரியாவில் பூரண நிறுத்தம் ஏற்பட்ட பின்பு தென் கொரியாவும் அழைத்து சமாதான மகாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்று கூறும் ஐ. நா. தரப்பு யோசனையை கம்யூனிஸ்டுகள் இன்று ஏற்றுக் கொண்டனர். ஆனால் இந்த மகாநாட்டில் கொரியப் பிரச்னைகள் பற்றி மட்டுரம விவாதிக்க வேண்டும் எனைற நிபந்தனையை கம்யூனிஸ்டுகள் நிராகரித்து விட்டனா.

இந்த சமாதான மகாநாட்டு யோசனையை சென்ற புதன் கிழமையன்று கம்யூனிஸ்டுகளே தெரிவித்தனர். இந்த மகாநாட்டில் வடகொரியாவும், கம்யூனிஸ்டு சீனுவும், ஐ. நா. சார்பில போராடும நாடுகளும் மட்டுமே கலந்து கொள்ளவேண்டும் என்றும், ஐ. நா ஸ்தாபனத்தில் அங்கம் வகுக்கும் தென் கொரியா இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்றும் கம்யூனிஸ்டுகள் தங்கள்யோசனையில் தெரிவித்திருந்தனர்.

மாகாட்டில் கொரியாபற்றி மட்டுமே விவாதிக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிப்பதால் மகாநாட்டின் பூரண லட்சியம் நிறைவேற தடையாக இருக்கும், என்று வடகொரிய பிரதிநிதி தளபதி நாம் இல் கூறினார்,

கொரியா என்பது எல்லாவற்றினின்றும் தனித்திருக்கும் பிரச்னையல்ல, அங்கு சமாதானம் ஏற்பட அதனுடன் சம்பந்தப்பட்ட எல்லா பிரச்னைகளையும் விவாதிக்க வேண்டும் என்று அவர் கூறினார்,

கொரியாவுக்கு அப்பாற்பட்ட வேறெந்த பிரச்னையையும் தீர்க்க சிபாரிசு செய்ய ராணுவ தூது குழுக்களுக்கு உரிமையில்லை என்று, வடகொரிய பிரதிநிதியின் வாதத்துக்கு பதிலளிக்கையில் ஐ நா பிரதம பிரதிநிதி ஜாய் சொன்னார்,

வேலை தேடித்தரும் நிலையஙகளின் சாதனை

......

1951-ல் 4 லட்சம் பேருக்கு வேலை கிடைத்தது

புதுடில்லி, பிப். 10—

1952 வேலையளிப்புநிலைமையில். 1950-ம் வருஷத்திலிருந்ததைக் காட்டிலும் 1951-ம் வருஷத்திலஎல்லா அம்சங்களிலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதுஎன்பதாகவேலை தேடித்தரும் நிலையங்களின் சாதனை பற்றிய 1951-ம் வருஷத்திற்கான புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இந்த வருஷத்தில் 4 லட்சத்து 86ஆயிரத்துக்குமேற்பட்ட காலி ஸதானங்கள் பற்று வேலை தேடித்தரும் நிலையங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. முந்தைய வருஷத்தில் 4 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் குறைவான காலி ஸ்தானங்கள் பற்றியே தகவல் தெரிவிக்கப்பட்டது இந்த வருஷம் வேலை யளிப்பு சந்தர்ப்பங்கள் அதிகமாயிருந்ததன் காரணமாய மேலும் அதிக அளவில் ஆட்கள் வேலையிலமர்த்தப்பட்டனர். முந்தைய வருஷத்தில் வேலையிலமர்த்தப்பட்ட 3லட்சத்து 31 ஆயிரம் பேர்களுக்குஎதிராக, இந்த வருஷத்தில் ஆண்களும், பெண்களுமாக மொத்தம் 4 லட்சத்து 16 ஆயிரம் பேர்கள் (27,000 அகதிகள் உட்பட வேலையிலமர்த்தப்பட்டனர்.

இந்த வருஷம் 13 லட்சத்து 75 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள், உதவி கோரி வேலை தேடிததரும் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர். முந்தைய வருஷத்தில் பதிவு செய்துகொண் [illegible] 12 லட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

டிசம்பர் மாத நிலவரம்

1951 டிசம்பர் மாதத்தில் 1,755 அகதிகள் உட்பட மொத்தம் 35,545 பேர்கள் வேலையிலமர்த்தப்பட்டனர் இந்த மாதத்தில் தகவல் தெரிவிக்கப்பட்ட காலி ஸ்தானங்களின் எண்ணிக்கை 39,533 ஆகும். இந்தக் கணக்குப்படி வேலையிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை, தகவல் தெரிவிக்கப்பட்ட ஸ்தானங்களில் 90 சதவிகிதம் என்று தெரிகிறது. இதற்கு முந்திய வேறெந்த மாதத்திலும் இவ்வளவு பேர் வேலையிலமர்த்தப்படவில்லை.

தொழில் மந்திரி காரியாலயத்தின் பயிற்சித் திட்டத்தின் கீழ் டிசம்பர் மாத இறுதியில் 1,964 இடம் பெயர்ந்தவர்களும், 362 பெண்களும் உட்பட மொததம் 9,430 நபர்கள் பல்வேறு பயிற்சி ஸ்தாபனங்களிலும, பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி பெற்று வந்தனர். இது த்விர இடம் பெயர்ந்தவர்களுக்கான வேலைப் பயிற்சி திட்டத்தின் கீழ், 854 தொழிற்சாலைகளில் உற்பத்தி வேலைகளில் பயிற்சி பெற்றுவந்தனர்.

......

ஸ்பெயினில் கடல் தளங்கள்

லண்டன் பிப் 16...

ஸ்பெயினில் யூ எஸ் விமான கடல் தளங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறதென்று பிரிட்டனின் ஸண்டேடைம்ஸ் நிருபர் கூறுகிறார்.

தளங்கள் கட்டப்படும் வேலை மிகமிக துரிதமாக நடைபெறுகிறதென்றும், இவ்வருஷ முடிவிற்குள் இவை தயாராய் இருக்கும் என்றும் இந்நிருபர் மேலும் கூறியுள்ளார்.

எகிப்து பிரிட்டன் சமாதானத்திற்கு

இராக்கின் பெருமுயற்சி

கெய்ரோ பிப். 10—

ஆங்கிலோ எகிப்திய விவகாரத்திற்கு ஒரு பரிகாரம் காண இராக் பிரதம மந்திரி நூரி பாஷா செய்து வரும் முயற்சிகள் பெரும் அளவுக்கு வெற்றியளித்துள்ளதாக அல் மிஸ்ரி என்ற பிரபல கெய்ரோ பத்திரிகை இன்று தலையங்கம் எழுதியுள்ளது.

சாத்யமாக விரைவில் தன் படைகளை சூயஸ்பகுதியிலிருந்து காலி செய்வதற்கு பிரிட்டன இணங்குமாறு இராக் பிரதமர் வற்புறுத்தியுள்ளதாகவும் சூயஸ் தளங்களைப் பாதுகாக்கவும் எகிப்திய ராணுவத்திற்குப் பயிற்சி அளிககவும் தொழில் வல்லுநர்கள் நிபுணர்கள் படை ஒன்று சூயஸில் நீடித்து இருக்க வேண்டுமென பிரிட்டன் கோருகிறது என்றும் தெரிவதாக அப்பத்திரிகை கூறுகிறது.

அது மேலும் கூறுவதாவது:-

ஆனல் சொற்ப தொகையுடைய நிபுணர்களையே அங்கு வைத்திக்க வேண்டும் என்றும் இதர மேற்கு நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைப்பதற்கும் உரிமை இருக்க வேண்டும் என்றும் நூரி பாஷாவற்புறுத்தியுள்ளாராம்.

சூடான் விஷயத்தில் தற்போது அங்குள்ள ஆட்சியில் மாறுதல் ஏதும் கூடாதென்றும் எகிப்தின் வாக்கெடுப்பு யோசனையை ஏற்க முடியாதென்றும் பிரிட்டன் பிடிவாதம் செய்ததாகத் தெரிகிறது.

சூடானுக்கு எகிப்து சுயாட்சி வழங்கினால் எகிப்திய மன்னரையே சூடான் மன்னராகவும் பிரிட்டன் அங்கீகரிக்கும் என நூரி நம்புகிறார்

(சமீபத்தில் நூரி பாஷா லண்டன் விஜயமசெய்திருந்தபோது இராக்கின் பூர்வாங்கமத்தியத்த யோசனைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக பிரிட்டிஷ் வெளி நாட்டிலாகா அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார் ஆனல் யோசனைகள் என்ன என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் வெளியிடவில்லை)

......

ஆயுள் இன்ஷுரன்ஸ் அதிகரிக்கின்றது

பிரிட்டனில் இப்பொழுது ஆயுள் இன்ஷுரன்ஸ் செய்து கொள்ளுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண் வருகிறது 1950ல் 519,000,000 பவுன் பெறுமான இன்ஷுரன்ஸ் செய்து கொண்டனர் என்றும் 1951ல் 616,000,000 பவுன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

வயோதிக்காலத்தில் தங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்குமென்றுதான் இன்ஷுர் செய்து கொள்ளுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணம்.

....

பாரசீக எண்ணெய்ப் பிரச்னை

தீர்த்துவைக்கக் குழு

வாஷிங்டன், பிப் 11—

பாரசீக எண்ணெய் பிரச்னையைத் தீர்க்க ஒரு தற்காலிகடன் பாட்டிற்கு முதலமைச்சர் முஸாதிக்டிக உடன்படச் செய்வதில் உலகப் பாங்கிக்குழு வெற்றி பெறும் என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இந்த திட்டப்படி உலகபாங்கி நிதி உதவி டெக்னிகல் உதவி எண்ணெயை மார்க்கெட் செய்ய வசதி ஆகிய வசதிகளை செய்து தரும்,

ஒண்ணெய் தொழில் டிரஸ்டியாகதான் இருப்பதாக உலக பாங்கி சொல்லப் போவதில்லை என்று தெரிகிறது.

இருதரப்பினரும் ஏற்கும் ஒரு சாத்யமான திட்டத்தை நிதி உதவி செய்து நடத்தி வைக்க உலக பாங்கி தயாராகவே இருகிறது

....

போலந்துக்குப் புது அரசியல் திட்டம்

போலந்துக்கு புது அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் போலந்தை ஸோவியத் மயமாகச் செய்ய இது உபயோகப்படும் என்றும் இது பொதுஜன அங்கீகாரத்திற்காக விடப்பட்டுள்ளதென்றும் இங்கு கூறப்படுகிறது,

நகல ரூபத்திலுள்ள இந்த அரசியலை போலிட் கம்யூனிஸ்ட் கட்சியின போலிட்பீரோ அங்கீகரித்துவிட்டது இது அமுலுக்குந்தால் 1935ல் நிறைவேறிய அரசியல் சட்டம் செல்லத்தக்கதாகிவிடும்.